DB14-2-2-TA

# உங்கள் விசுவாசத்தை குறித்து உலகத்தால் கேட்கப்படும் கேள்விகள் - நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்:** ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில் இன்று, உயர்நிலை பள்ளியில் இருக்கும் போது தவறாமல் சபைக்கு சென்றுகொண்டிருந்த கிறிஸ்தவ வாலிபர்களில் 70% கல்லூரி மற்றும் பல்கலைகழகங்களில் சேர்ந்தவுடன் தங்கள் கிறிஸ்தவ விசுவாசத்தைவிட்டு பின்னடைவை சந்திக்கின்றனர் என்று புள்ளிவிபரம் கூறுகிறது. அவர்கள் வளர்க்கப்பட்ட அந்த விசுவாசத்தை விட்டு அவர்கள் பின் வாங்க காரணம் என்ன? பல்கலைகழகத்தில் இணையும் மாணவர்கள் இன்னி அவர்கள் ஞாயிறு பள்ளியில் இருக்க அவசியமில்லை என நினைக்கின்றனர். மதசார்பற்ற பேராசிரியர்கள் கிறிஸ்தவம் எப்படி துவங்கியது என்ற கேள்வியை அவர்கள் முன் வைக்கிறார்கள். இயேசு யார். அவர் மரணத்திலிருந்து உயிர்த்தார் என்று நம்பமுடியுமா? வேதம் நமக்கு எப்படி கிடைத்தது, அதில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்கள் அனைத்தையும் முழுமையாக நம்பலாமா?

32% கிறிஸ்தவ மாணவர்கள் தங்களுக்கு சமய நம்பிக்கையை குறித்த சந்தேகங்களினால் பின்மாற்றமடைந்ததாக சொல்கிறார்கள். அவர்களுடைய விசுவாசத்திற்கு எந்த அர்த்தமும் இல்லாமல் போயிற்று, பதிலளிக்க முடியாது என்று தோன்றும் வகையில் பல கேள்விகள் அவர்கள் முன்பாக இருப்பதுபோல நினைத்தார்கள்.

63% கிறிஸ்தவ இளைஞர்கள் இயேசுதான் உண்மையான தேவனுடைய ஒரே குமாரன் என்பதை விசுவாசிக்கவில்லை என்கின்றனர்.

51% இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தார் என்பதை நம்பவில்லை என்கின்றனர்.

68% பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்தில் ஒருவர் என்பதை நம்புவதில்லை என்கின்றனர்.

33 % மட்டுமே வீட்திற்கு அடுத்தபடியாக சபைதான் தங்கள் வாழ்வில் பெரும்பங்காற்றுகிறது என்கின்றனர்.

ஆனா இந்த நிலையை மாற்றியமைக்க முடியும் என்று நம்புகிறேன். நான் நம்பிகொண்டிருந்த அனைத்தும் சவாலிடப்பட்ட என் கல்லூரியின் முதல் நாள் இன்னும் என் நினைவில் இருக்கிறது. எனவே நமது இந்த செய்திதொடருக்கு நான் வைத்திருக்கும்

தலைப்பு “நம்முடைய மகன் மற்றும் மகள் கல்லூரிக்குள் நுழைவதற்கு முன்பு அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் என்ன, அவர்கள் தங்கள் விசுவாசத்தில் இடறாமல் இருக்க வேண்டும்” இந்த செய்தியானது மாணவர்களுக்கு மட்டும் என்றில்லை, கிறிஸ்துவை அறியாதவர்களோடு பணிபுரியும் ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும்.

இந்த காரியங்களை நம்மோடு பகிர்ந்துகொள்ள இருக்கும் இன்றைய விருந்தினர் Dr. டேரல் பாக், நமது தேசத்தில் இருக்கும் வரலாற்று இயேசுவை பற்றி எடுத்துசொல்லும் வல்லுனர்களில் ஒருவர், லூக்கா சுவிசேஷம் மற்று அப்போஸ்தலர் இரண்டையும் விளக்கும் உலக பிரசித்திபெற்ற நபராகவும் இருக்கிறார். இவர் புதிய ஏற்ப்பாடு பற்றிய ஆராய்ச்சிகளில் முதன்மை பேராசிரியராக டாலாஸ் தியோலஜிகள் செமினரியில் பணிபுரிகிறார், சுமார் 30 புத்தகங்களை எழுதி பல தொலைக்காட்சி பேட்டிகளில் பங்குபெற்றிருக்கிறார் ABC, CNN, Fox மற்றும் டிஸ்கவரி சேனல்.

***

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நாம் பார்த்துக்கொண்டிருப்பது என்னவென்றால் உங்கள் மகன், உங்கள் மகள், கல்லூரி மற்றும் பல்கலை கழகங்களுக்குள் நுழையும் போது எப்படிப்பட்ட காரியங்களை அவர்கள் கேள்விப்படுகிரார்கள்? தேவனை குறித்து கேள்விப்படும் காரியங்கள் என்ன? இயேசுவை குறித்து அவர்கள் கேள்விப்படுவது என்ன? வேதாகமம் நம்முடைய கரத்தில் எப்படி வந்ததென்று அவர்களுக்கு சொல்லப்படும் காரியங்கள் என்ன? இதை நீங்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியம். நாம் பார்த்துக்கொண்டிரும் கேள்விகளுக்கு எப்படி பதில் சொல்லவேண்டும் என்பதை அவர்கள் அறிந்திருக்க வேண்டியதும் அவசியம் தான். இல்லாவிட்டால் அவர்கள் தங்கள் விசுவாசத்தை விட்டுவிடுவார்கள்.

பொதுவாக எழும்பும் ஒரு கேள்வி என்னவென்றால், அதாவது, எப்படி வேதாகமம் நமது கரத்தில் வந்தது? இங்கிருக்கும் வசனங்கள் என்னது? இதற்கு மேலாக சொல்லன்னுன்னா, நீங்க ஒருவேளை கேட்கலாம் இங்க, பாருங்கள், இயேசு இருந்தார் பழைய ஏற்பாடும் இருந்தது. இயேசுவும் யூத ஜனங்களும் பழைய ஏற்ப்பாட்டின் தொகுப்புகள் இருக்கிறதென நினைத்தார்கள், பழைய ஏற்ப்பாட்டின் புத்தகங்கள். எப்போது அப்போஸ்தலர்களின் புத்தகங்களும் நிருபங்களும் வந்தது, இயேசுவிற்கு பிறகு எப்போது ஆதிகிறிஸ்தவர்கள் சிந்திக்க துவங்கினர், “அது ஏன்னன்னா, பவுலின் நிருபங்கள், பேதுருவின் நிருபங்கள், யோவானின் புத்தகம், லூக்கா, மற்றும் இதர வசனங்கள் அனைத்தும் பழைய ஏற்பட்டு வசனங்களுக்கு ஈடாக இருப்பதாக நினைத்தது எப்போது” சரி, நேயர்களே, இப்போது சில விமர்சக வல்லுனர்கள், பல்கலைகழக பேராசிரியர்கள், இயேசு போனபிற என்ன நடந்து என்பதை பற்றியும் புதிய ஏற்ப்பாடு என்று அழைக்கப்படும் இந்த 27 புத்தகங்களில் சொல்லப்பட்டவைகளை என்ன செய்யவேண்டும் என்று பல யோசனைகளை கொண்டிருக்கின்றனர். டேரல், இந்த விமர்சக குழுவினரால் பரப்பப்பட்ட சில யோசனைகளை பற்றி கொஞ்சம் சொல்லுங்க.

**Dr. டேரல் பாக்:** சரி, பொதுவாக கேனனை பற்றி சொல்லப்படும் கருத்துகள் என்னனா பல்கலைகழக வளாகத்தில் இதை பற்றி மாற்று கருத்துகள் இருக்கிறது சில குறிப்பிட்ட குழுவினர் தங்கள் கருத்தை முன்வைக்கின்றார், சிலர் சபையை முன்வைத்து தங்கள், கருத்துகளை உட்புகுத்துகின்றனர். ஒன்று நினைவில் இருக்கட்டும் விமர்சிக்கும் வல்லுனர்களில், பெரும்பாலானோர், ஆரம்ப நூட்ட்ராண்டுகளில் பலதரப்பட்ட கிறிஸ்தவர்கள் இருந்ததை பிடித்துகொள்கிறார்கள். அவர்களுடைய வைதீக தரத்தை உருதியாக்கிகொள்ள அவர்கள் இந்த வாசனைகளை பயன்படுத்தி உருவாக்கிகொண்டார்கள்.

இந்த காரியங்கள் அனைத்தும் இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் இரேனியஸ் எழும்பும்வரை இருந்தது. இருந்தாலும், பிரபலமாக, மக்கள் மத்தியில் எழும்பியது டான் பிரவுன் மூலம் எழுந்த சர்ச்சைதான், இதன் விளைவாகத்தான் நான்காம் நூற்றாண்டின் இறுதியிலும் ஐந்தாம் நூற்றாண்டிலும் சமயம் சார்ந்த கோட்பாடுகள் உருவானது. எனவே, உண்மையில், இது பிற்காலத்தில் நடந்தவைதான், அதாவது இதற்கு மாறாக இருக்கும் காரியங்களை நிலைகுலைய செய்யவேண்டும் என்ற அரசியல் நோக்கங்கள், செயல்பட்டு வந்தது. இதில் பெரிய அரசியல் போராட்டமே இருந்தது.

அவங்க சொல்லற விஷயம் என்னன்னா: அதாவது, நாம பார்த்துக்கொண்டிருக்கும் வரலாற்று காரணிகள் அனைத்துமே அவர்களால் குறிப்பிடப்பட்டு சொல்லப்படுபவை, சில சூழ்சிகள் உள்ளதுபோல எடுத்து சொல்கிறார்கள். அவர்கள் குறிப்பிடும் காரியம் ஏனன்னா, சுவிசேஷங்களை எழுதியவர்கள் ஆரம்பத்தில் ஒருவரை ஒருவர் மேற்கோள்காட்டி எழுதுவதை பார்க்க முடியவில்லை. அந்த நாட்களில் மட்டுமல்ல, இரண்டாவது நூற்றாண்டின் துவக்கத்திலும், புதிய ஏற்ப்பாட்டை குறித்த எந்த கருத்துகளும் எழும்பவில்லை. அப்போது இருந்ததெல்லாம், பவுல் இப்படி சொன்னார், அல்லது சுவிசேஷத்தில் இப்படி இருக்கிறது என்பதுதான். அதோடு இரண்டாம் நூற்றாண்டின் ஒவ்வொரு செயல்பாட்டிலும் ஓரிரு சுவிசேஷங்களின் தாக்கத்தையும், பவுலின் ஓரிரு நிருபங்களையும் பார்க்கமுடியும். அந்த காலகட்டத்தில், அதாவது, வேதாகமத்தின் 27 புத்தகங்கள் என்று இணைத்து செயல்பட்டு வந்தததை பார்க்க முடியாது. அத கொஞ்சம் கேலியா சொல்ல, விரும்புகிறேன், அதாவது சபைகென்று வேதம வருவதற்கு முன்பு வேதாகம சபையில் எப்படி இறையியலை போதிப்பீர்கள்? அப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் இருக்கிறீர்கள்,

இதை பற்றிய வாக்குவாதம் தான் அங்கு எழும்பியது. இந்த அரசியல் திருவிளையாடல் இருந்தது. அப்போது சில கேள்விகள் எழும்பினது: வசனங்களை எடுத்து சொல்லும் ஞானம் எங்கிருந்து வந்தது? அதோடு, இந்த புத்தகங்கள் முதன்மையானதாக வருவதற்கு காரணமான செயல்பாடுகள் என்ன? சரி, பொதுவாக பார்க்கும்போது இந்த கடிதங்களில், பலதும் சபைகளுக்கு எழுதி அனுப்பப்பட்டபோது சபையாருக்கு முன்பாக வாசிக்கப்பட்டிருக்கிறது. பவுல் சொல்லும்போது தான் எழுதியவற்றை சபையாருக்கு வாசிக்கும்படியாக சொல்லுகிறார். பவுலின் எழுத்துகளுக்கு தனி மதிப்பும் மரியாதையும் இருந்தது. பவுல் தான் சொல்லிய காரியங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து வெறுத்தவர்களை பற்றியும் சொல்லியிருக்கிறார், அவன் எழுதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாமல்

இருந்திருக்கின்றனர், இதுபோன்றவற்றை எதிர்கொண்டதை, சில இடங்களில் சொல்லுகிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, ஓரிரு உதாரணங்களை அவர்களுக்கு சொல்லலாமா, ஏன்னா இந்த உதாரணங்கள் எல்லாம் புதிய ஏற்ப்பாட்டின் புத்தகங்களிலும் நிருபங்களிலும் இருந்து எடுக்கப்பட்டவை. இருந்தாலும் நாம யாரையும் கட்டாயப்படுத்தி இது தேவனால் அருளப்பட்ட பரிசுத்தமான வார்த்தைகள், பரலோகத்திலிருந்து வந்தவை, அதனால எந்த கேள்வியும் கேட்க்காம நம்புங்கன்னு சொல்லறதா அர்த்தமில்ல. நாங்க சொல்ல இந்த தகவல்கள் அனைத்தும், ஆதிகாலத்தில் கிறிஸ்தவர்கள் அந்த காலக்கட்டத்தில் எப்படி யோசித்தார்கள் என்பதை நமக்கு எடுத்து சொல்கிறது, அவர்கள் எதை விசுவாசித்தார்கள், எதை பற்றிக்கொண்டிருந்தார்கள், அதைதான் நாம் திருப்பி பார்க்கப்போகிறோம், அந்த பதிவுகளை ஆராய்ந்து பார்த்து, அவர்கள் என்ன சொல்கிறார்கள் என பார்க்கபோகிறோம். சரியா. அவங்க என்ன சொல்றாங்கன்னு பார்க்கலாம். முதல்ல 1 பேதுரு 1:23-25ஐ பார்ப்போம். பேதுரு இப்படி சொல்கிறார், “ நீங்கள்,” கிறிஸ்தவர்களுக்கு சொல்கிறார், அழிவுள்ள வித்தினாலே அல்ல அழிவில்லாதா வித்தாகிய ஜீவனுள்ள வார்த்தைகளினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே. மாம்சமெல்லாம் புல்லைப்போலவும் மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது. புல் உலர்ந்தது அதின் பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றன்றைக்கும் நிலைத்திருக்கும்.” அதை தொடர்ந்து அவர் சொல்லுகிறார், “உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே.” பேதுரு எதை பற்றி சொல்லுகிறார்?

**Dr. டேரல் பாக்:** இது, மிகவும் முக்கியமான ஒன்று. உண்மையாகவே இப்ப, எனக்கு, துளி குதித்து இது ரொம்ப முக்கியமானதுன்னு சொல்லனுன்னு நினைக்கிறேன். இங்க என்ன பார்க்கிறோம் என்றால்: நாம வாழ்மொழி கலாச்சாரத்துல இருந்தொன்னு சொன்னது ஞாபகமிருக்கா. வாழ்மொழி கலாசாரத்தில் வார்த்தைகளால் செய்திகள் சொல்லப்படும். சுவிசேஷத்தை பற்றி சொல்லப்பட்ட பிரசங்கங்களுக்கு தேவனுடைய வார்த்தை என்று சொல்லுவார்கள். பொதுவாக தேவனுடைய வார்த்தை என்றதும் நாம் எழுதப்பட்ட வார்த்தைகளை நினைத்திடுவோம். ஆனால் இங்கு தேவனுடைய வார்த்தை என்பது தேவனிடத்தில் இருந்து வந்து சுவிசேஷத்தின் நற்செய்தி அதுதான் தெய்வீகமான செய்தி, அதை போதிக்கவும் பிரசங்கிக்கவும் செய்தனர். பேதுரு சொல்லுகிறார், மற்றவர்களும் இதை பற்றி சொல்லுகிற காரியங்களையும் எடுத்து சொல்வீர்கள் என நினைக்கிறேன்.

அப்படின்னா அப்போஸ்தலர்களுடைய செய்திகளும் அவர்களுடைய சாட்சிகளும் நமக்கு வாய்மொழி வாயிலாகத்தான் கிடைத்திருக்கிறது. அதனால நம்மிடம் இருக்கும் புதிய ஏற்ப்பாடானது, அந்த சாட்சிகள் மரணத்தை நெருங்கும்போது அவர்களால் இனி பேசவும் பிரசங்கிக்கவும் முடியாது என்ற நிலையில், அவர்கள் சாட்சிகளாக உறுதியாயிருந்து, அவர்களால் சொல்லப்பட்டவைகள் அனைத்தும் கர்த்தருடைய வார்த்தையாக புதிய ஏற்பாடாக எழுதப்பட்டது.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஒரு விஷயம் மிகவும் பிரமிக்கவைக்கிறது அதாவது பவுலும் பேதுருவும் ஜோவானும் பேசினபோது, அது வசனத்திற்குஈடானதாக, உருதியாயிருந்திருக்கிறது. ஆனா அதைபற்றிய நம்முடைய கருத்தை பாருங்கள்.

**Dr. டேரல் பாக்:** வசனங்கள் உருவாவதற்கு முன்பே உண்டான வசனங்கள்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** சரியா சொன்னீங்க. இப்ப இங்க என்ன சொல்லப்பட்டிருக்குன்னு பாருங்க அப்போஸ்தலர் 18:11, பவுலை பற்றி சொல்லப்படுகிறது,"அவன் ஒரு வருஷமும் ஆறு மாதமும் அங்கே தங்கி (என்ன செய்துகொண்டிருந்தார்?) தேவவசனத்தை அவர்களுக்குள்ளே உபதேசம்பண்ணிகொண்டு வந்தான்." மறுபடியும் அப்போஸ்தலர் 13:46 கூறுகிறது, அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி, முதலாவது உங்களுக்கே தேவவசனத்தை சொல்ல வேண்டியதாயிருக்கிறது என்றார்கள்." சரி, இதை, விளக்கி சொல்லுங்க.

சரி, இப்ப, இங்க பவுலும் பர்னபாவும் லூக்காவினுடைய சாட்சிகளின் தொகுப்பில் சொல்லப்படுகிறார்கள். இன்னும் கொஞ்ச நேரத்துல பவுல் நேரடியாக இப்படி சொல்வதை நாம பார்த்திடலாம். இப்படி சொல்லப்பட்ட கர்த்தருடைய வார்த்தைகளின் எல்லா செய்திகளையும் எழுத்து வடிவில் பெற்றதுமட்டுமல்லாமல், ஆதித்திருச்சபையில் இருந்தவர்களின் வித்தியாசமான சாட்சியின் நிலைகளையும் பெற்றிருக்கிறோம். பேதுரு சொன்னதை பார்த்தோம், இது லூக்காவின் வார்த்தைகள். பவுலை பற்றியும் நாம் பார்க்க இருக்கிறோம், யோவானுடைய வார்த்தைகளும் நம்மிடம் இருக்கிறது. நாம என்ன செய்கிறோம் என்றால், இந்த உண்மையை நாம ஆணித்தரமாக சொல்கிறோம், சைகளில் இறையியலின் மையப்போருளை பற்றி பேசுகிறோம், அந்த இறையியலின் மையப்பொருளில் இருக்கும் உபதேசத்தின் கருப்பொருள் இதுதான், அதாவது சுவிசேஷத்தின் செய்தி பிரசங்கிக்கப்படும்போது அதில் தேவனுடைய வார்த்தை சொல்லப்படவேண்டும். இதை கொண்டுவருவதற்கு உந்துதலாயிருந்தது இறையியலின் மையப்பொருள்தான். புதிய ஏற்ப்பாடு என்பதும் இறையியலின் மையப்பொருளை எடுத்துரைத்த சாட்சிகளின் தொகுப்பாகும்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** சரி இப்ப வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவானை பற்றி பார்க்கலாம். வெளிப்படுத்தல் புத்தகத்தின் முதில் ஓரிரு அதிகாரங்களையாவது வாசிக்க வேண்டும் என்று சொல்லுவார்கள். மேலும் முதலாம் அதிகாரத்தை பார்க்கும்போது, அதில் யோவான் சொல்கிறார்: உங்கள் சகோதரனும் இயேசு கிறிஸ்துவினிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும் அவருடைய ராஜ்யத்திற்கும் அவருடைய பொறுமைக்கும் உங்கள் உடன்பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான் தேவவசனத்தினிமித்தமும் இயேசுகிறிஸ்துவை பற்றிய சாட்சியினிமித்தமும் பத்மு என்னும் தீவிலே இருந்தேன்."

**Dr. டேரல் பாக்:** அவர் சுவிசேஷத்தை பிரசங்கித்ததால் சிறைபிடிக்கப்பட்டார். அதைதான் அவர் அங்கு சொல்லுகிறார்; மனுக்குலத்தை விடுவிக்கும்படியான தேவனுடைய திட்டத்தையும் செயல்களையும் இந்த காரியங்கள் வெளிப்படுத்துகிறது. அவர் சிறையில் இருந்தார், சிறைபட்ட இடத்திலிருந்து, தேவ வார்த்தையை

பிரசங்கித்ததினிமித்தம் பத்மு தீவில் இருக்கையில் வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதினார்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** டேரல், அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு முக்கியமான விஷயத்தை இங்கே சொல்லுகிறார், 1 தீமோத்தேயு 5ல் கூறுகிறார், "போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக என்றும் வேலையால் கூலிக்கு பாத்திரனாயிருக்கிறான் என்றும் வேதவாக்கியம் சொல்லுகிறதே." இது பழைய ஏற்ப்பாட்டின் வசனம், "வேலையாள் கூலிக்கு பாத்திரனாயிருக்கிறான்," இது லூக்காவின் வார்த்தைகள், லூக்கா சுவிஷேஷத்தில் இருக்கிறது.

இயேசுவும் கூட கலாசாரத்தின் வாயிலாகத்தான் போதித்தார். இன்னும் சிலரும் அப்படிதான்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆனா. ஆனா அவர் என்ன செய்தார், சரி, அவர் என்ன செய்தார் என்று சொல்லுங்க.

**Dr. டேரல் பாக்:** சரி, அவர் என்ன செய்தார் என்றால், இயேசுவின் போதனைகளுடன் பழைய ஏற்ப்பாட்டின் வசனங்களையும் சமப்படுத்தி சொல்லுகிறார், இயேசுவின் போதனைகளை பற்றி லூக்காவில் பார்க்கும்போது, இரண்டும் ஒன்றாக இணைந்திருக்கிறது. சரி இப்ப, எச்சரிக்கையை குறித்த குழப்பங்கள் இருக்கிறது. நீங்க சொன்ன இதிஷ் பகுதி பவுலின் ஆரம்ப நாட்களில் இருந்ததை பார்க்க முடியும். அதற்கான பதிலை பெறப்போகிறீர்கள், "சரி, பவுல் 1 தீமோத்தேயுவை எழுதவில்லை." நாத்திகர்கள் உங்களிடம் இப்படிதான் சொல்வார்கள். அதனால் இன்னொரு விவாதம் அந்த இடத்தில் எழும்பும். நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன், பவுல் 1 தீமோத்தேயுவை எழுதவில்லை என்ற கருத்தை முன்வைத்து விவாதிப்பதாக வைத்துக்கொள்வோம். நமக்கு முதியே ஏற்ப்பாட்டின் பதிவுகளும் பழைய ஏற்ப்பாட்டின் வாசங்களும் சமமாக இருக்கிறதென்று சொல்ல முதல் நூற்றாண்டின் சாட்சிகள் இருக்கிறது பழைய ஏற்ப்பாட்டின் வசனங்கள் மற்றும் இயேசு பேசிய தேவ வார்த்தைகள், இவை அனைத்தையும் ஒன்றோடு ஒன்று வைத்து பார்த்தால் சரியாக இருக்கும். இவைஅனைத்தையும் வசனங்கள் என்கிறோம். அதிகாரத்தை உடைய காரியங்கள் சபைகளில் நடந்தவைகள் சபை கலாசாரத்திலிருந்து கடந்துவந்த காரியங்கள் அனைத்தும் இந்த பகுதிகளில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** சரி, ஆல்ரைட், இப்போதும், நேயர்களே, அன்றைக்கு இவை சம்பவிக்கும்போது இருந்த மக்களின் சாட்சிகளின் கூற்றுக்கு என்ன நடந்ததென்று கவனியுங்கள், அப்போஸ்தலரும் மற்ற சிலரும், "இதை வேதவசனமாக கருதுகிறோம் என்றனர். இது தேவனுடைய வார்த்தை என்கிறோம் என்றனர்." புதிய ஏற்ப்பாட்டில் இருக்கும் வசனங்கள் அனைத்தும் ஆதிகால கிறிஸ்தவர்களின் விசுவாசம் எதன் அடிப்படையில் இருந்ததென்பதற்கு ஆதாரமாகும், அதைதான் அவர்கள் அறிக்கைசெயதனர். அதை தாண்டி எதையும் சோழ முடியாது. எனவே, டேரல், காலாத்தியரில் பவுல் கூறிய வார்த்தைகளை பற்றி நீங்கள் சொல்லும்படி விரும்புகிறேன். காலாத்தியர்கள் எவ்வளவு சீக்கிரத்தில் அதை விடு வெளியே வந்தனர்?

**Dr. டேரல் பாக்:** கலாத்தியர், சரி, கலாத்தியர் நிருபம் கலாத்தியாவின் எந்த பகுதியில் எழுதப்பட்டதென்ற விவாதம் இருக்கிறது, அது 50களில் எழுதப்பட்டிருக்கும். 50களின் ஆரம்பத்தில் இருக்கிறோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, அப்படின்னா இதெல்லாம் , இயேசுவுக்கு பிறகு 20ஆண்டுகள் கழித்து நடக்கிறது. பவுல் கலாத்தியாவில் இருப்பவர்கள் மீது உண்டான வேதனையோடு சொல்கிறார்: "நான் ஆச்சரியப்படுகிறேன்," பவுல் சொல்கிறார், "உங்களை கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்கு திரும்புகிரத்தை பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன். வேறொரு சுவிசேஷம் இல்லையே சிலர் உங்களை கலகப்படுத்தி கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை புரட்ட மனதாயிருக்கிரார்கலே யல்லாமல் வேறல்ல." மேலும் பவுல் கூறுகிறார், "நாங்கள் உங்களுக்கு பிரசங்கித்த சுவிசேஷத்தை அல்லாமல், நாங்களாவது வானத்திலிருந்து வருகிற தூதனாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்கு பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்ககடவன்." முதல் முறை சொல்லும்போதே அவர்கள் புரிந்துகொள்ளாததால் அதைஏ மறுபடியும் சொல்லுகிறார், டேரல். சுவிசேஷத்தின் செய்தியை பற்றி இதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

**Dr. டேரல் பாக்:** பவுல் என்ன சொல்கிறார் என்றால் அவர் சொல்கிற சுவிசேஷத்தின் செய்தியும் மற்ற அப்போஸ்தலர்கள் சொல்லும் சுவிசேஷத்தின் செய்தியும் மேலான சுவிசேஷத்தின் செய்தி என்கிறார். அதில் மாற்றமே இல்லை. புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கிற விஷயம் என்னவென்றால் இறையியலானது அதனுடைய நிலையை விட்டு விலகிவிட்டது. இதைதான் அதாவது இறையியலின் மையப்பொருள் நடைமுறைபடுத்தப்படும் விதத்தில் பலவித மாற்றங்கள் பெறுகின்றனர் என்பதை பல விதங்களில் பல்வேறு நபர்கள் எழுதுகிறதை இதில் பார்க்கின்றோம். ஆனால் அதன் மையப்பொருள் பாதுகாக்கப்பட்டது. அதனால்தான், ஆதியில் நாம் செய்த காரியங்களுக்கு செல்கிறோம், அதனால் தான் மத சம்பிரதாயங்களை செய்யும்போது தேவனுடைய பந்தியில் அமரும்போது, நீங்கள் "கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை தெரிவிக்கிறீர்கள்." அதனால் தான் நீங்கள் ஞானஸ்நானம் எடுக்கும்போது நீங்கள் கழுவப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு ஆவியானவரால் அருளப்படும் நித்திய ஜீவனை நீங்கள் ஈவாகப் பெறுகிறீர்கள். சுவிசேஷம் என்பது அதுதான்.

இது இயேசு கிறிஸ்துவின் மூலமாக வருகிறது, பாவத்திற்கான மரணத்தினால் மட்டுமல்ல. ஏனென்றால் பாவத்திற்கான மரணம் என்ன செய்கிறது என்றால் உங்களை கழுவி தேவன் யங்கள் வாழ்வில் வந்து வாசம்செய்ய வழிவகுக்கிறது அதோடு எதிர்காலத்தில் நீங்கள் அவரோடு தொடர்ந்து நடக்கும்படிக்கும் நீங்கள் யார் என்பதை அறிந்துகொள்ளும்படியான தாக்கத்தை உண்டாக்குகிறது. இதில் கவனிக்க வேண்டிய காரியம் இறையியலின் மையப்பொருள் எந்த விதத்திலும் மாடம் அடையாமல் இருக்கிறது. சரி, அதனுடைய பிரதிபளிப்பு என்றைக்கும் முடிவடையாது, ஏனென்றால் சுவிசேஷம் ஆழமான சத்தியம். எனினும் இறையியலின் மையப்பொருள் ஆதிமுதலாய் இருக்கிறது அது மாறவேயில்லை. அதில் ஒரு பின்னடைவு உண்டாவதை பவுல் உணர்ந்தாலும் – இங்கு சுவிசேஷத்தை புரட்டுகிறவர் எழும்பியதால் சில பிரச்சனைகளை அவர் எதிர்கொள்வதை நமக்கு எடுத்து சொல்கிறார், " நீங்கள் என்னோடு

இணைந்திருங்கள், இயேசுவோடு பேசி நடந்து வாழ்ந்த அப்போஸ்தலர்களோடு இணைந்திருங்கள், இதுதான் சுவிசேஷம் என்கிறார்."

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** சரி, கலத்தியரின் காரியங்களை அவர் வேருகிறார், ஏனென்றால் முதல் தடவை அதைப்பற்றி அவர்களுக்கு சொல்லியிருந்தும், அவர்கள் மறுபடியும் இடறி விழுகிறார்கள் சரியா. அவர்களை மறுபடியும் சரிபடுத்துகிறார். இதையே மறுபடியும் கொரிந்து சபையிலும் செய்கிறார், சரி. அவர் 1 கொரிந்தியர் 15ல் சொல்லும்போது, இந்த புத்தகம்தான் 55களில் செய்திமேடையில் வைக்கப்பட்டிருந்தது, அவர்களுக்கு 50ல் அவர்களுக்கு பிரசங்கித்ததை அவர் சொல்லுகிறார், இயேசுவிற்கு பிறகு 20ஆண்டுகள் கழித்து நிற்கிறோம். "அன்றியும், சகோதர சகோதரிகளே, நான் உங்களுக்கு பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்கு தெரியப்படுத்துகிறேன், நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைத்திருக்கிறீர்கள். அதினாலே நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்கள்"

**Dr. டேரல் பாக்:** மறுபடியும், இங்கு அவர் சொல்லுகிற காரியம் என்னவென்றால், இது அவருடைய சொந்த சுவிசேஷம் கிடையாது. கலாசாரத்திலிருந்து அவர் பெற்றுக்கொண்டதை நமக்கு ஒப்புவிப்பதாக சொல்லுகிறார். இதை மற்ற அப்போச்தலர்களுடன் பகிர்ந்துகொள்கிறார். உயிர்த்தெழுதல் என்பது இறையியலின் நம்பிக்கையின் மையமாக இருக்கிறதை அதைதான் அவர் 15ம் அதிகாரத்தில் விளக்கமாக சொல்ல முன்வைக்கிறார். இயேசு உயிர்த்தார் தேவனால் கனப்படுத்தப்பட்டார் என்ற காரியமானது அவர் யார் என்பதை எடுத்துரைக்கிறது - 1 கொரிந்தியரின் அதே அதிகாரத்தில் முன்வரும் வசனங்களை பார்க்கும்போது – இரண்டாம் ஆதாமாக இருக்கிறார், சிருஷ்டிப்பில் நடந்த குழப்பத்தை மாற்றியமைக்கிறவர், அந்த ஒழுங்கின்மையை மாற்றியமைத்து அதிலிருந்து வெளிவருவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்ப்படுத்தினார், இதைதான் இயேசுகிறிஸ்து இரட்சிப்பில் நமக்கு அருளியிருக்கிறார். அதைதான் அவர் அங்கே சொல்லுகிறார்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** இதை பற்றி பேசிக்கொண்டிருக்கையில் ஒரு கேள்வி இந்த விசுவாசம் வெளிப்பட்டதா, இந்த உபதேசம் மாறினதா. கிறிஸ்துவை பற்றிய எல்லா விஷயங்களும், உருவாக்கப்பட்டதா? இல்ல, இல்லவே இல்ல. அதாவது, மறுபடியும் மறுபடியும், ஆதி நாட்களின் சாட்சிகள் இதுஒரு பிரத்தியேக சம்பவம் என்கின்றனே, ஒரே சம்பவத்தைதான் பல்வேறு கோணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. யூதா இருக்கிறார், யாக்கோபின் சகோதரன், இயேசுவின் சகோதரன், என்றால் சரியாயிருக்கும். யூதா ஒரு சிறு பகுதியை மட்டுமே எழுதியிருக்கிறார், ஒரு நிருபம். அதில் அவர் சொல்கிறார், "பிரியமானவர்களே, நாங்கள் சொல்லும் இரட்சிப்பை குறித்து எழுதுவது எனக்கு விருப்பம்தான்," ஆனாலும், "விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய் போராடவேண்டுமென்று உணர்த்துவது அவசியமாக கண்டது, இதில் குறிப்பாக அவர் சொல்கிறார், "பரிசுத்த வாங்கலுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம்" சரி, சிலர் இது 65ல் எழுதப்பட்டது என்று சொல்வதை கேட்டிருக்கிறேன், வேறுசிலர் இது 80ல் எழுதப்பட்டது என்கின்றனர். விசுவாசம் ஒப்புவிக்கப்பட்டிருகிறது, உண்மை. அப்படியானால், அவர்கள் அதை தற்காத்துக்கொள்ள அவர் விரும்புகிறார்.

**Dr. டேரல் பாக்:** ஆமா. இது ரொம்பவுமே, புதிய ஏற்ப்பாட்டின் வெளிச்சத்தில் நாம் எப்படிப்பட்ட காரியங்களை பார்க்கிறோம் என்பதை அறிந்துகொள்வது மிகவும் முக்கியம் என்று நினைக்கிறேன். இதில் விவாதிக்கப்படும் விஷயம், இறையியலின் மையப்பொருள் இருக்கிறது. அந்த இறையியலின் மையப்பொருள் நம்மை அப்போஸ்தலர்கள் மற்றும் இயேசுவிடம் கொண்டு செல்கிறது. இயேசு போதித்தவைகளுக்கு அப்போஸ்தலர்கள் சாட்சிகளாக இருக்கின்றனர். அதுதான் அங்கு, சொல்லப்படுகிறது. ஆனால் புதிய ஏற்ப்பாட்டை பார்க்கும்போது, புதிய ஏற்ப்பட்டு புத்தகங்கள், இந்த மையப்பொருள் என்ன என்பதை பற்றிய மக்களின் வெளிப்பாடாக இருக்கிறது. எங்கிருந்து வந்தது, தேவனை பற்றி என்ன சொல்கிறது, இயேசுவை பற்றி என்ன சொல்கிறது, ஆவியை பற்றி என்ன சொல்கிறது, உலகத்தை பற்றி என்ன சொல்கிறது, இஸ்ரவேலை பற்றி என்ன சொல்கிறது, எதிர்காலத்தை பற்றி என்ன சொல்கிறது, இதுபோன்றவை அதில் இருக்கிறது.

சரி, இந்த காரியங்கள் எல்லா கோணத்திலும் பரவி செல்கிறது. புதிய ஏற்ப்பாட்டில் பார்க்கும்போது, வளர்ச்சி என்று வல்லுனர்களால் சொல்லப்படுவது, என்னவென்றால் இந்த மையப்பொருள் வெளிப்படுத்தப்படும்படியாக செய்யப்படும் விஷயங்களை குறிக்கிறது. மேலும், சிலர், மையப்பொருளில் வெளிப்படும் காரியங்களை பற்றி எழுதுகிற ஆசிரியர்கள் இருக்கிறார்கள். வேறு சில மையப்பொருளில் இருந்து வெளிப்படும் மற்ற காரியங்களை பற்றி எழுதுகின்றனர். பல கோணங்களில் இருந்து காரியங்களை கண்காணிக்கின்றனர். விசுவாசம் கிரியையை பற்றி சொன்னால் சிறந்த உதாரணம் யாக்கோபும் பவுலும்தான். பவுல் ஒரு கேள்வியை கேட்க்கிரார்ல் இதை பெற என்ன செய்ய வேண்டும்? விசுவாசம் வேண்டும், யாக்கோபு அதை பார்த்து சொல்லுகிரார்ல் விசுவாசம் என்பது வாழ்க்கையில் எப்படி இருக்கும்? அது ஒரு பொருளா. ஓகே, அவர்களுக்கிடையில் மாற்று கருத்துகள் கிடையாது, அதை அவர்கள் பலவித கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள்.

இதில் இருக்கும் வித்தியாசம் புரிகிறதா. உங்களை குழப்பத்தில் விட எனக்கு விருப்பமில்லை, இது எல்லாம் ஒன்றா அல்லது வேறு மாதிரியா, இதெல்லாம் ஒன்றுதானா, இல்ல, ஆழம் அதிகம். அந்த ஆழத்தை வைத்துதான் நடைமுறையில் காணப்படும் வித்தியாசங்களை நாம் பார்க்க முடிகிறது, சிலர் சிலவற்றை முன்வைக்கின்றனர், மற்றவர்கள் வேறு விஷயங்களை முன்வைக்கின்றனர். மேலும் புதிய ஏற்ப்பாட்டில் உண்டான வளர்ச்சியை பார்த்து அதை குறித்தும் நீங்கள் பேசமுடியும், ஆனால் இது அனைத்தும் கருபொருளின் மையத்தில் இருக்கிறது, இது எல்லாம், அதிலிருந்துதான் வருகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. நாமா பேசிக்கொண்டிருக்கும் இந்த இறையியலின் மையப்பொருளானது முதலில் பரிசுத்தவாங்களுக்கே அளிக்கப்பட்டிருக்கிறது என நினைக்கிறேன்.

**Dr. டேரல் பாக்:** நீங்க சொல்றது சரிதான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அதோடு அவர், தொடர்ந்து சொல்கிறார், 17ம் வசனத்தை பாருங்கள், அதோ அவர், “நீங்களோ, பிரியமானவர்களே, நம்முடைய கர்த்தராகிய

இயேசுகிறிஸ்துவின் அப்போச்தலரால் முன் சொல்லப்பட்ட வார்த்தைகளை நினைவுகூருங்கள்.” இந்த இடத்தில், அதாவது, அப்போஸ்தலர்களிடம் பிரத்தியேக செய்தி இருந்தது. அவர்கள் தான் அதிகாரம் பெற்றிருந்தவர்கள். அவர்கள் வசனத்தை தான் எடுத்து சொல்லியிருக்கிறார்கள் என்பது, உண்மை.

**Dr. டேரல் பாக்:** புதிய ஏற்ப்பாட்டில் என்ன நடந்தது என்றால், நம்முடைய அப்போஸ்தலர்கள் மரணத்தை நெருங்கிவிட்டனர் வாய்மொழியாக சொல்லப்பட்ட அவர்களுடைய ஜீவனுள்ள வார்த்தைகள் இனி கேட்கப்படுவதில்லை. இப்போது அவர்களுடைய வார்த்தைகள் அனைத்தும் எழுத்து வடிவம் பெற்றது. அதனால மத்தேயுவும் யோவானும், அப்போஸ்தலர்களாக நின்று, அவர்கள் மூலமாய் சொல்லப்பட்ட எல்லா காரியங்களை இதில் பதிவு செய்தார்கள். அடுத்தது மாற்கு, பேதுருவை பிரதிபளிக்கிறார். லூக்கா இருக்கிறார், பல விதங்களில் சபையை அவர் பிரதிபளிப்பவராகவே இருக்கிறார். இப்படிதான் சுவிசேஷங்கள் நமக்கு கிடைத்தது. பவுல் பார்த்தவைகளை போதிக்கும்படியான எழுதப்பட்ட நிருபங்களும் நம்மிடம் இருக்கிறது. பேதுரு நெருங்கிய அப்போஸ்தலரில் ஒருவரான அவருடைய நிருபம் உள்ளது. யோவானால் எழுதப்பட்ட யோவானுடைய புத்தகங்கள் இருக்கிறது. எபிரெயரில், அதன் ஆக்கியோன் யார் என்று நமக்கு தெரியாது, ஆனா அது அந்த இடத்தில் இருப்பது நேர்த்தியாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நாம் பார்த்தவற்று சுருக்கமாக சொல்ல முடியுமா, இயேசுவை பற்றி நாம் பகிர்ந்துகொண்ட அனைத்து தகவல்களும் மாணவர்களுக்கு தைரியத்தை ஏற்ப்படுத்திட உதவியாயிருக்கும், சுவிசேஷத்தின் செய்தியையும் வசனம் எப்படி வந்தது என்பதையும் உயிர்த்தெழுதலை பற்றியும் அறிந்திகொள்ள உதவும்.

**Dr. டேரல் பாக்:** நம்முடைய விவாதம் எதை பற்றி இருக்கிறது என்றால் இறையியலின் கருப்பொருளானது ஆதிமுதலாயிருக்கிறது என்கிறோம். முந்தைய காலத்திலும் இதை பற்றி சொல்லியிருக்கிறார்கள், அந்த சாட்சிகள், உபதேசங்களின் சுருக்கமாகவும், அவர்களுடைய பாடல்கள் மூலமும், மத சடங்குகளின் மூலமும், நடந்த காரியங்களை எழுதப்பட்ட பதிவுகளோடு அந்த நாட்களுக்கே நம்மை அழைத்துசெல்கின்றனர். ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக இருக்கிறது, இயேசுவின் ஊழியங்களும் அப்போஸ்தலர்களின் பிரசங்கங்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது. அதைதான் நாமும் சொல்லுகிறோம். இது அதாத்தியமான ஒரு விளக்கம். ஆமா, இங்கு சொல்லப்பட்ட காரியங்கள் வெவ்வேறு விதங்களில் இருப்பதை வசனத்தில் பார்க்கிறோம், ஆனால் அதற்கு காரணம் இயேசு செய்த காரியங்களை எல்லா கோணங்களிலும் ஆழமாக எடுத்து சொல்லும்படியாக அப்படி சொல்லப்பட்டிருக்கிறது.

அதனால நம்முடைய கருத்து என்னன்னா சுவிசேஷத்தின் கருபொருளைதான் ஆதிதிருச்சபையினர் முதலாம் நூற்றாண்டில் தேவனுடைய வார்த்தையாக கருதினார்கள். அந்த செய்தியைத்தான் அவர்கள் பிரசங்கித்தனர், அந்த செய்தியானது தேவனிடத்தில் இருந்து வந்த வெளிப்பாடாக இருக்கிறது, நீங்கள் தேவனுடனான உங்கள் உறவை இயேசு கிறிஸ்துவின் மூலம் புதுப்பித்துகொள்ளலாம் என்பதே அந்த செய்தி அவர் உங்களுக்கு மன்னிப்பையும் உங்களால் பெற்றுக்கொள்ள முடியாத ஒன்றையும்

உங்களுக்கு கொடுக்கிறார். பாவத்திற்கு மன்னிப்பு மட்டும் கொடுப்பதில்லை, ஆனால் தேவனுடைய ஆவியினாலே நம்முடைய வாழ்வில் நாம் பிதாவோடு நெருங்கும் படி அனுக்கிரகம் அளிக்கிறார், நித்தியமாய் தேவனோடு இணைக்கப்பட்டிருக்க முடியும், அது உங்களுக்கு நித்தய வாழ்க்கையை அளித்திடும். நித்திய வாழ்க்கை என்பது நித்திய காலமாக மாத்திரம் இல்லாமல். நித்திய வாழ்வு தரமானதாகவும் இருக்கிறது. அது நித்தியரிடமிருந்து வருகிறது. நீங்கள் மறுபடியும் அவரோடு ஐக்கியப்பட முடியும், சிருஷ்டியானது எந்த நோக்கத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டதோ அந்த நோக்கத்தில் மறுபடியும் நிற்கமுடியும். தேவனுடைய வார்த்தை என்று ஆதி திருச்சபையினர் சொல்லும் சுவிசேஷத்தின் மையப்பொருள் இதுதான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, நேயர்களே நீங்கள், ஒருவேளை 15 வயதுடையவராக இருக்கலாம், அல்லது 25 வயது, அல்லது 50 வயது, அல்லது 80 வயது, வாழ்வின் எந்த கட்டத்தில் நீங்கள் இருந்தாலும் சரி, இயேசு தன்னை பற்றி சொன்னபடியே இருக்கிறார் என்பதற்கு ஆதாரம் இருக்கிறது. அவர் உண்மையில் மரணத்திலிருந்து உயிர்த்தார். இப்போது ஜீவிக்கிறார். அவர்தான் இந்த உலகத்தின் இரத்ழகர். உங்களை இரட்சிக்கும்படி விரும்புகிறார். உங்கள் வாழ்வில் ஒரு கட்டத்தில் அவரை பற்றி நீங்கள் யோசிக்க வேண்டும், ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும், உங்கள் இரட்சகராக அவரை உங்கள் வாழ்வில் ஏற்றுக்கொள்வீர்களா? உங்களை மாற்றும்படியாகவும் உங்கள் பாவங்களை மன்னிக்கும்படியாகவும் அவரிடம் கேட்ப்பீர்களா? நீங்கதா அதை தீர்மானிக்க வேண்டும். அந்த தீர்மானத்தை இப்போதே எடுப்பீர்கள் என நன்புகிறேன். இந்த உபகரணங்கள் அனைத்தையும் நீங்கள் எப்படி பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறிந்துகொள்ள தொடர்ந்து இணைந்திருங்கள். கவனியுங்கள்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.